## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.12/2020

2026 –ம் ஆண்டு மார்ச் மாதம் 04 –ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 04.03.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சந்திரமோகன் (DW–1 ) | வயது | : | 49/2026 |
| த/க பெயர் | : | திரு. பன்னீர்செல்வம் | தொழில் | : | ஒப்பந்ததாரர் |
| முகவரி | | ஆலாத்தூர் | வட்டம் | : | மன்னார்குடி |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி;–**

1. வாதியானவர் சர்வே எண்.175/0ல் விஸ்தீரணம் 38 குழிக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்கண்ட சர்வே எண், விஸ்தீரணத்தை ஆட்சேபித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் தாவா சொத்து தொடர்பாக வாதிக்கு எதிராக கேவியட் மனு வா.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ–6 ஆவணத்தில் சர்வே எண்.175/0ல் விஸ்தீரணம் 1 ஹெக்டேர் 1.56.50 ஏர்ஸ் கேவியட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. சர்வே எண்.175/0ல் மொத்த விஸ்தீரணத்திற்கும் எனது மனைவி கேவியட் மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நான்கெல்லையாக குளம் மற்றும் திடல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தான 38 குழியும் வாதி திடலுக்கு மட்டும்தான் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த திடலின் நான்கெல்லை களத்திற்கு கிழக்கு, ரோட்டுக்கு தெற்கு மற்றும் மேற்கு, குளத்திற்கு வடக்கு என்றால் சரிதான்.

3. இந்த நான்கெல்லைக்கு உட்பட்ட சொத்து வாதியின் அனுபோகத்தில் இருப்பதை சட்டவிரோதமாக அரசியல் காழ்புணர்ச்சி கொண்டு தடை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டதால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் வாதி கோருகின்ற பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரிதான்.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 18:30:22 +0530

District Munsif

Mannargudi.